[1980 பிப்ரவரி 2

தர்மபுரியில் வரலாற்றுப் பொருட்காட்சியகம்.

வினா எண் 11—திரு. எம். அண்ணாமலை: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தர்மபுரி மாவட்டம், தர்மபுரியில் வரலாற்றுப் பொருட்காட்சி உருவாக்கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தர்மபுரி மாவட்டம் தருமபுரியில் வரலாற்றுப் பொருட்காட்சி உருவாக்கும் உத்தேசம் அரசுக்கு இல்லை. ஆனால், அப்பகுதியில் உள்ள தொல் பொருள்களைக் கொண்டு மாநில தொல்பொருள் துறையினரால் இவ்வாண்டில் ரூ. 58,000 செலவில் ஒரு தொல்பொருள் அருங் காட்சியகம் (Site Museum) அமைக்க அரசு அனுமதித்துள்ளது.

திரு. எம். அண்ணாமலை: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகையில் தொல்பொருள் காட்சியகம் ஒவ்வொரு மாவட்டங்களிலும் உருவாக்கும் ஒரு திட்டம் இருப்பதாகச் சொன்னார்கள். அது எந்த ஆண்டில் இருந்து அமுல் படுத்தப்படும் என்பதோடு தர்மபுரியில் தொல்பொருள் காட்சியகம் அமைக்க மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் மூலம் சர்க் காருக்கு பரிந்துறை செய்யப்பட்டுள்ளது. இது பரிசீலிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திலேயும், மாவட்ட அருங்காட்சியகம் அமைக்க வேண்டும் என்ற உத்தேசம் இருந்தாலும்' இப்போது தர்மபுரி மாவட்டத்தில் உடனடியாக ஆரம்பிக்கக் கூடிய நிலையில் இல்லை. மற்ற மாவட்டங்களைப் பற்றி யோசிக்கிற போது இந்தப் பகுதியிலும் எடுத்துக் கொள்ளப்படும்.

சென்னை மாநிலக் கல்லூரி.

வினா எண் 12—திரு. பொ. விஜயராகவன். மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.

(அ) சென்னை மாநிலக் கல்லூரியில் உள்ள தொழிற் பட்டறையில் என்னென்ன இயந்திர உபகரணங்கள் இருக்கின்றன?

(ஆ) அவை ஒழுங்காகச் செயல்படுகின்றனவா?

(இ) அந்தத் தொழிற் பட்டறையை மாணவர்கள் சிறந்த முறையில் பயன்படுத்த என்னென்ன வசதிகள் செய்து கொடுக்கப் பட்டுள்ளன?

1980 பிப்ரவரி 2]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:

(அ) சென்னை மாநிலக் கல்லூரியில் கீழ்க்கண்ட உபகரணங்கள் உள்ளன.—

(1)	கடைசல் இயந்திரம் (Lathe Machines)	3
(2)	சிறிய மேசை கடைசல் இயந்திரம் (Small Table Lathe).	1
(3)	உலோகத் தகட்டில் துளைகள் இடுவதற்கான இயந்திரம் (Milling Machine).	1
(4)	உலோகத்தில் (பெரிய அளவு) துளையிடும் இயந்திரம் (Drill Large size).	2
(5)	உலோகத்தில் (சிறிய அளவு) துளையிடும் இயந்திரம் (Drill Small size).	1
(6)	மின் உலோக ரம்பம் (Power Hacksaw).	1
(7)	மரம் அறுக்கும் இயந்திரம் (Wood Cutting Machine).	1
(8)	மரம் அளவு கணக்கிடும் இயந்திரம் (Wood Planning Machine).	1
(9)	அறவைக் கல் (Grinding Stone)	1

(ஆ) மேற்குறிப்பிட்டுள்ள உபகரணங்கள் அனைத்தும் ஒழுங்காகச் செயல்படுகின்றன.

(இ) தொழிற் பட்டறையை மாணவர்கள் பயன்படுத்துவது இல்லை.

திருவில்லிபுத்தூர் நகரில் அரசு அலுவலர்களுக்கு வீடுகள்.

வினா எண் 13—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருவில்லிபுத்தூர் நகரில் அரசு அலுவலர்களுக்கு வீட்டு வசதி வாரியத்தில் இருந்து வீடுகட்டிக்கொடுக்கும் திட்டம் அரசு செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.